**பாடம் - 3**

**الدرس الثالث**

## அறுப்பதன் சட்டங்கள்

## أحكام الذكاة

தரைவாழ்ப் பிராணிகள் ஹலாலாக ஆவதற்கு ஷரீஅத் அனுமதித்த முறையில் அவற்றை அறுப்பது நிபந்தனையாகும். அறுப்பது என்பது உண்ண அனுமதிக்கப்பட்ட பிராணியின் தொண்டையையும், உணவுக் குழாயையும் முறிக்கும் அளவு அறுக்க வேண்டும். அறுக்க இடம் அளிக்காத பிராணியைக் குத்தி வீழ்த்தி அறுக்க வேண்டும். சக்திக்குட்பட்ட எந்தப் பிராணியையும் அறுக்காமல் உண்பது ஹலாலாகாது. ஏனெனில் அறுக்கப் படாதவை செத்தவையாகும்.

**அறுப்பதற்குரிய விதிகள்** :அறுப்பதற்கு சில விதிகள் உள்ளன. அவை வருமாறு:

1. அறுக்கத் தகுதியானவனாக இருக்கவேண்டும். அதாவது அறுப்பவன் புத்தி சீர்நிலையில் உள்ள, மார்க்கம் அறிந்த முஸ்லிமாகவோ அல்லது வேதம் கொடுக்கப்பட்டவனாகவோ இருக்க வேண்டும். போதையுள்ளவன், பைத்தியக் காரன், விபரமில்லாத சிறுவன் ஆகியோர் அறுத்தது கூடாததாகும். ஏனெனில் இவர்களிடம் விளங்கும் தன்மையில்லாததால் அறுப்பதன் நோக்கம் இவர்களிடம் செல்லாது. மேலும் சிலை வணங்கக்கூடிய காஃபிரோ, நெருப்பு வணங்கியோ, கப்ருவணங்கியோ அறுத்ததும் ஹலாலாகாது.
2. அறுக்கும் கருவியை நன்றாகத் தீட்டிக்கொள்ள வேண்டும். இரத்தத்தை ஓட்டக்கூடிய இரும்பு, கல் அல்லது இதுபோன்ற கூர்மையானவற்றைக் கொண்டு அறுப்பது கூடும்.பல்(எலும்பு) மற்றும் நகம் கொண்டு அறுப்பது கூடாது.
3. தொண்டையை- மூச்சுக் குழாயை அறுக்க வேண்டும். மேலும் உணவுக் குழாய், பிடரி நரம்புகளில் ஒரு நரம்பு ஆகியவற்றையும் அறுக்க வேண்டும். குறிப்பாக இந்த இடத்தில் இவற்றை அறுப்பதற்குரிய தத்துவம் இரத்தத்தை வெளியேற்றுவதே ஆகும். ஏனெனில் இந்த இடம்தான் நரம்புகள் ஒன்று சேரும் இடமாகும். மேலும் இது விரைவாக உயிர் பிரிவதற்கு ஒரு வழியாகவும் பிராணிகளுக்கு சிரமமில்லாமல் இலேசாகவும் இருக்கும். அத்துடன் மாமிசம் மிகச்சுவையாகவும் இருக்கும். மேற்கூறப்பட்ட பகுதியில் அறுக்க இயலவில்லையெனில் - உதாரணமாக வேட்டைப் பிராணி போன்று - அதன் உடலில் ஏதேனும் ஓர் இடத்தில் காயப்படுத்துவதன் மூலம் அதன் அறுப்பு நிறைவேறிவிடும். கழுத்து நெறிக்கப்பட்ட, அடிபட்ட, உயரமான இடத்திலிருந்து வீழ்ந்த, மோதப் பட்ட, கொடிய விலங்குகளால் கடித்துக்குதறப்பட்ட பிராணிகளை உண்பது கூடாது. ஆனால் அவை உயிர் பிரியாமல் இருந்து அவற்றை அறுத்து விட்டால் அவற்றைச் சாப்பிடுவது ஹலாலாகும்.
4. அறுக்கும்போது அறுக்கக்கூடியவன் பிஸ்மில்லாஹ் என்று கூற வேண்டும். அத்துடன் அல்லாஹுஅக்பர் என்பதையும் சேர்த்துக்கூறுவது சுன்னத்தாகும்.

### அறுக்கும் ஒழுங்குமுறைகள்

1. பிராணிகளை கூர்மையற்ற ஆயுதங்களைக் கொண்டு அறுப்பதும்,
2. அவை பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஆயுதங்களைக் கூர்மைப் படுத்துவதும்,
3. கிப்லா அல்லாத திசைகளில் அவற்றைப் படுக்க வைத்து அறுப்பதும்,
4. மரணிக்கு முன் கழுத்தை வெட்டுவதும், தோலை உரிப்பதும் ஆகிய இவையனைத்தும் வெறுக்கத்தக்கதாகும்.

ஆடு, மாடுகளை இடது பக்கமாக படுக்கவைத்தும், ஒட்டகத்தை அதன் இடது காலைக்கட்டி நிற்கவைத்தும் அறுப்பது சுன்னத்தாகும். அல்லாஹ் மிக அறிந்தவன்.